<u>வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்</u>

<u>ஆணையிடுபவர்: திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, இ.ஆ.ப.,</u>

ந.க.எண்.A42/2024 நாள்: 30.12.2024

பெறுநர்

முதன்மை கல்வி அலுவலர் அவர்கள்

வேலூர் மாவட்டம்.

பொருள் 2024-2025 ஆண்டிற்கான விளையாட்டுத்துறை சார்பில் அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது போல் தகுதி கலாச்சாரத்தை இளைஞர்கள் இடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டி 05.01.2025 அன்று நடத்துவது அனுமதி கோருதல் - சார்பாக.

பார்வை

1. உறுப்பினர் செயலர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செ.மு.ஆ.எண் 004310/ஓய்டபிள்யு.1/2024, நாள் 23.12.2024
2. பேரறிஞர் அண்ணா மாரத்தான் போட்டி நடத்துவது தொடர்பாக – மாவட்ட ஆட்சித்தலைவரின் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்ற நாள் 27.12.2024.

ஆணை:

பார்வையில் காணும் கடிதத்தின்படி 2024-2025 ஆண்டிற்கான விளையாட்டுத்துறை சார்பில் அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவது போல் தகுதி கலாச்சாரத்தை இளைஞர்கள் இடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டி இந்த நிதியாண்டில் நமது வேலூர் மாவட்டத்தில் 05.01.2025 அன்று காலை 6.00 மணியளவில் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பின்வரும் கூடுதல் விவரங்கள் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கனிவான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மாவட்ட அளவிலான மாரத்தான் போட்டிகள் கீழ்காணும் பட்டியலின்படி மாணவர்கள் மற்றும் மாணவிகளின் வயது வரம்பு பட்டியல் இருக்க வேண்டும்.

| வ.எண் | வயது வரம்பு | ஆண்கள் | பெண்கள் | பிறப்பு வருடம் |
|---|---|---|---|---|
| 1. | 17 முதல் 25 வயதுக்குட்பட்டவர்கள் | 8 கி.மீ. | 5 கி.மீ. | 2001 முதல் 2008 ஆம் ஆண்டிற்குள் பிறந்தவராக இருக்க வேண்டும். |
| 2. | 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் | 10 கி.மீ. | 5 கி.மீ. | 2000 ஆண்டிற்கு முன் பிறந்தவராக இருக்க வேண்டும். |

போட்டியில் பங்கு பெற பதிவு செய்ய பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் , பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொள்ளும் வகையில் போட்டிகள் நடைபெறும். பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் ஆதார் அட்டை அசல் மற்றும் நகல் , மற்ற வீரர்கள் ஆதார் அட்டை அசல் மற்றும் நகலுடன் மாவட்ட விளையாட்டு அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது 7401703483 என்ற வாட்ஸ்அப் எண்ணிலோ 04.01.2025 மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்ய கடைசி நாள்ஆகும் . இப்போட்டிகள் 05.01.2025 அன்று காலை 6.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. காவல்துறை, மருத்துவத்துறை, பள்ளி கல்வித்துறை, உயர்கல்வித்துறை, உள்ளாட்சி அமைப்பு ஆகியோருடன் இணைந்து இந்த பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொண்டு போட்டிகள் நடத்தப்படும். இப்போட்டியில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகை தலா ரூ.5000, ரூ.3000, ரூ.2000 வீதமும் 4 முதல் 10- ஆம் இடம் வரை வெற்றி பெறுபவர்களுக்கு தலா ரூ.1000/- வீதம் பரிசுத்தொகையினை காசோலையாகவோ அல்லது வங்கிமாற்று வழி மூலமாக மட்டுமே வழங்கப்படும் மற்றும் தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும் .போட்டிகள் பிரம்மபுரம் shrishti school பள்ளி நுழைவு வாயிலில் தொடங்கப்பட்டு காரணாம்பட்டு மேம்பாலம் வரை உள்ள சாலையில் நடத்தப்பட உள்ளது. போட்டிகள் குறித்த விவரத்தினை நாளிதழ்கள் மூலம் பரப்பிட உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒம்/- வே.இரா.சுப்புலெட்சுமி
மாவட்ட ஆட்சித்தலைவர்
வேலூர் மாவட்டம்.

/ஆணைப்படி/

30/12/24

மாவட்ட ஆட்சியருக்காக.